<u>**Deposition of Witness**</u>

<u>**In the Court of Additional Subordinate Judge, Tenkasi.**</u>

Mcop 254/2019

எ.ம.சா 1 சரஸ்வதி

| | |
|---|---|
| Name | : சரஸ்வதி |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 18.03.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் தற்போது தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் சாட்சியம் அளிக்க வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. எனக்கு சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட அங்கீகார கடிதம் மூ.த.சா.ஆ 1. அழைப்பாணையில் சொல்லப்பட்டிருக்கும் டி.என்.72 ஏஏ.9309 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது மூ.த.சா.ஆ 2. அந்த மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் ஒட்டுனர் மன்சூர் என்பவரின் ஒட்டுனர் உரிமம் முன்னிலைப்படுத்தப்படவில்லை என சொல்லப்பட்டுள்ளது. ஒட்டுனர் மன்சூர், த/பெ.முகம்மது துரை, மேலத்தெரு, வாவாநகரம், செங்கோட்டை தாலுகா என்ற நபருக்கு 24.6.2019 க்கு முன்பு ஒட்டுனர் உரிமம் எதுவும் வழங்கப்படவில்லை. இந்த முகவரியானது தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியாகும். இந்த முகவரியை வைத்து வேறு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஒட்டுனர் உரிமம் பெற முடியாது. ஒட்டுனர்

உரிமம் இல்லாமல் வாகனத்தை இயக்குவது மோட்டார்வாகன விதிகளுக்கு புறம்பானதாகும்.

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

வேறு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஒட்டுனர் உரிமம் பெற்றிருந்தால் அது எங்களது அலுவலகத்தில் துலங்காது என்றால் சரிதான். வேறு முகவரியில் ஒட்டுனர் உரிமம் பெற முடியாது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஒட்டுனர் உரிமம் இல்லை என்பதற்கு மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் அபராதம் செலுத்தப்பட்டதாக எந்த பதிவுகளும் இல்லை என்றால் சரிதான்.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி(முழுபொ)
தென்காசி.